**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** தலைவர்
**K.சந்திரசேகரன்,B.A** பொதுச்செயலாளர்
**B.தியாகராஜன், M.Com.,** நிதிச்செயலாளர்

கடித எண்: 11/19
08.01.2019

பெறுநர்,
இயக்குனர் /நிதி,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : 01-12-2015 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்பட்ட ஊதிய மாற்றம் மற்றும் வேலைபளு திருத்தம் குறித்த ஒப்பந்தம் - ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளை அமுல்படுத்துதல் தொடர்பாக.

பார்வை: மின்வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கு மிடையே 20-02-2018 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம்.

*********

கீழ்கண்டவற்றை தங்களது மேலான கவனத்திற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிட வேண்டி கொண்டு வர விழைகின்றோம்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் ஊழியர்களுக்கு 01-12-2015 முதல் அமுல்படுத்தப்பட்ட ஊதிய உயர்வு அதோடு இணைத்து ஏற்கனவே அமுலில் இருந்த வேலைபளுவை திருத்தி அமைத்தல் ஆகியவை தொடர்பாக வாரியத்தால் இயக்குனர்(நிதி) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட பேச்சுவார்த்தைக்குழுவிற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே 19-09-2016 துவங்கி பல சுற்று பேச்சுவார்த்தைகளின் இறுதியில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 22-02-2018 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கீழ்கண்ட கோரிக்கைகளும் முடிவுகளும் தீர்வுகாணப்படாமல் நிலுவையாக உள்ளது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வரவிழைகின்றோம்.

**1. ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட வேலைபளுவின் அடிப்படையில் பொறுப்புகள் அனுமதிக்கப்படவில்லை.**

ஒப்பந்தத்தில் களப்பிரிவு வருவாய்ப்பிரிவு, மின்கட்டணக்கணக்கீடு மற்றும் வசூல் பிரிவு மற்றும் பண்டகசாலை பணியாளர் பிரிவு ஆகியவற்றிற்கு ஏற்கனவே இருந்த பணி அளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் ஏற்பட்டு ஏறத்தாழ 11 மாதங்கள் கழித்த பின்பும் ஒப்பந்தப்படி பொறுப்புகள் அனுமதிக்கப்படவில்லை.

2. **வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்படாத பகுதிகளில் ஊழியர் எண்ணிக்கையை வரையறுத்தல்.**

வேலைபளு ஒப்பந்தத்திற்கு உட்படாத மத்திய அலுவலகங்கள் செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு கணக்குப்பிரிவு, நிர்வாகப்பிரிவு, தொழில் நுட்பப்பிரிவு ஆகியவற்றில் ஊழியர் எண்ணிக்கையை வரையறுத்து பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கை தீர்வு காணப்படாமல் உள்ளது.

3**. ஒப்பந்தத்தில் உள்ள குறைகள் (Anomalies) களைதல்:**

22-02-2018 தேதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஊதிய உயர்வு தொடர்பாக 02-03-2018 அன்று வழங்கப்பட்ட வாரிய ஆணை எண் 9ல் வரையறுக்கப்பட்ட விதி எண் 9ல் புதிய ஊதிய விகிதத்திற்கு வருவதற்கான விருப்பத்தை தெரிவித்திட கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

**OPTION:-**

(1) A Workman may exercise option to remain in the existing pay until any of the following dates falling between 01-12-2015 and 22-02-2018:

(i) To remain in the existing pay until the date on which he earns his next (or) any subsequent increments in the existing pay:

(ii) On the date of promotion (or) on the date of fixation on promotion:

(iii) On the date of movement to Selection Grade/Special Grade.

(iv) On the date of appointment to a post by internal selection.

மேற்கண்ட ஆணையில் 01-12-2015க்கு முன்பு பதவி உயர்வு பெற்றவர்களும் தங்களுடைய ஆண்டுயர்வு காலம் 01-12-2015 க்கு பின்பு இருக்குமாயின் அந்த ஆண்டுயர்வு, அன்று பதவி உயர்வு ஊதியம் நிர்ணயித்த பின் ஊதிய உயர்வினை பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம் என உத்திரவு இடப்பட்டுள்ளது 22-02-2018க்கு முன்னால் பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட்டு இருந்தும் சில நிர்வாக காரணங்களுக்காகவும் வேறு சில சூழ்நிலைகளிலும் 22-02-2018 க்குள் பதவி உயர்வு பொறுப்பில் பணியேற்றிட இயலாமல் பின் தேதிகளில் சிலர்

பணியேற்றுள்ளனர். இவர்கள் பதவி உயர்வில், பணியேற்றநாளிலோ பதவி உயர்வுக்கான ஊதியத்தை நிர்ணயித்த பின் புதிய ஊதிய உயர்வினை பெற விருப்பம் தெரிவித்திட இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் இத்தகையவர்கள் ஊதிய உயர்வு நிர்ணயப் பலனில் பல ஆயிரகணக்கான தொகையினை இழந்து பணிகாலம் முழுமையும் கணிசமான பொருளாதார இழப்பிற்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே வாரிய நிர்வாகம் இதனை கனிவோடு பரிசீலித்து 22-02-2018க்கு முன்பு பதவி உயர்வு உத்திரவு வழங்கப்பட்டு 22-02-2018க்குள் பதவி உயர்வு பொறுப்பில் பணியேற்றிட இயலாதவர்களுக்கு அவர்கள் 22-02-2018க்கு பின் பணியேற்று இருந்தாலும் அவர்கள் பதவி உயர்வில் பணியேற்ற தினத்திலோ அல்லது பதவி உயர்வுக்கு அடுத்த ஆண்டுயர்வு நாளில் பதவி உயர்வு ஊதியம் நிர்ணயித்த பின் புதிய ஊதிய உயர்வினை நிர்ணயித்திட விருப்பம் தெரிவித்திட உத்திரவு வழங்கி உதவிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

4. மின்வாரிய மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர் (Staff Nurse) மற்றும் மருந்தாளுனர் (Pharmacist) ஆகியவர்களுக்கு தமிழக அரசில் பணிபுரியும் அவர்களுக்கு இணையான பொறுப்புகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊதிய விகிதத்தை அமுல்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

5. வருவாய்ப்பிரிவுகளுக்கு வரையறுக்கப்பட்ட மின்இணைப்புகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுத்திட ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளை அமுல்படுத்திட ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த ஒப்புதல் குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

6. 22-02-2018 அன்று ஏற்பட்ட ஒப்பந்தப்படி கணக்கீட்டாளர் 2ம்நிலை மற்றும் கணக்கீட்டாள் பொறுப்புகளை இணைத்திட ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் (Per)(FB) Tanjedco Proceedings No:12, dt:18-05-2018 வாயிலாக இது தொடர்பாக வழங்கப்பட்ட ஆணையில் இவர்களுக்கு பொறுப்புகள் இணைப்பிற்காக ஊதிய உயர்விற்கான கோரிக்கை வைக்கப்படாததால் வாடிக்கையாக வழங்க வேண்டிய 3% ஆண்டுயர்வு வழங்கத் தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக எங்களது 05-06-2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக நாங்கள் முன்வைத்த கோரிக்கையினை ஏற்று அவர்களுக்கு ஓராண்டுயர்வினை வழங்கிட வேண்டும்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

இணைப்பு : 1

நகல் : அமைப்புச்செயலாளர், நிதிச்செயாளர்,
தலைவர், செய்திமடல்.